



dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 275 | 4 Pages | 3.5.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 275 | 4 பக்கங்கள் | 3.5.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**எள்ளாமை வேண்டுவா னென்பான் எனைத்தொன்றுங்**
**கள்ளாமை காக்கதன் நெஞ்சு**

**விளக்கம்:**
பிறரால் இகழப்படால் வாழ விரும்புகிறவன், எத்தன்மையானப் பொருளையும் பிறரிடமிருந்து வஞ்சித்துக் கொள்ள எண்ணாதபடி தன் நெஞ்சைக் காக்க வேண்டும்.

# 3 விவசாயிகளுக்கு நம்மாழ்வார் விருது: மு.க.ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, மே.3

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

20232024ம் ஆண்டுக்கான வேளாண்மைஉழவர் நலத்துறையின் நிதிநிலை அறிக்கையில், உயிர்ம வேளாண்மையில் நம்மாழ்வார் அவர்கள் ஆற்றிய பெரும் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், உயிர்ம வேளாண்மையில் ஈடுபடும், ஊக்குவிக்கும் மற்றும் பிற உயிர்ம விவசாயிகளுக்கு கைகொடுக்கும் விவசாயிகளுக்கு தமிழ்நாடு அரசால்இயற்கைவேளாண்மையை விவசாயிகளிடம் பெருமளவில் கொண்டு சேர்த்த "நம்மாழ்வார்" பெயரில் விருது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, அவ்வகையில் 2024ம் ஆண்டு 3 விவசாயிகளுக்கு நம்மாழ்வார் விருது வழங்கப்பட்டது.



அதன் தொடர்ச்சியாக, 2025ம் ஆண்டிற்கான நம்மாழ்வார் விருது, உயிர்ம வேளாண்மையில் சிறந்து விளங்கும் கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த க.சம்பத்குமாருக்கு முதல் பரிசாக 2.50 லட்சம் ரூபாய் மற்றும் ரூ.10,000/ மதிப்பிலான பதக்கமும், திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த த.ஜெகதீஸ்க்கு இரண்டாம் பரிசாக 1.50 லட்சம் ரூபாய் பரிசுத் தொகை மற்றும் ரூ.7,000/ மதிப்பிலான பதக்கமும், நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த வே.காளிதாசுக்கு மூன்றாம் பரிசாக 1 லட்சம் ரூபாய் மற்றும் ரூ.5,000/ மதிப்பிலான பதக்கமும், முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்பித்தார்.

151 நபர்களுக்கு பணிநியமன ஆணை:

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 76 இளநிலை உதவியாளர்கள், 68 தட்டச்சர்கள் மற்றும் 7 சுருக்கெழுத்து தட்டச்சர்கள் என மொத்தம் 151 பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## இரண்டு அணு ஆயுத சக்திகள் மோதிக்கொள்வது கவலையளிக்கிறது அமெரிக்க துணை ஜனாதிபதி



வாஷிங்டன், மே.3

காஷ்மீரின் பஹல்காம் சுற்றுலா தளத்தில் கடந்த 22ந்தேதி பயங்கரவாதிகள்நடத்திய கொடூரதாக்குதலில் 26 பேர்கொல்லப்பட்ட சம்பவம், இந்தியா மட்டுமின்றி சர்வதேச அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய கொடுஞ்செயலில் ஈடுபட்டது தடை செய்யப்பட்ட பயங்கரவாதஅமைப்பானலஷ்கர்இதொய்பாவின்கிளைஅமைப்பான டி.ஆர்.எப். என்பது தெரியவந்துள்ளது. இதன் பின்னணியில் பாகிஸ்தான் இருக்கிறது என்று இந்தியா குற்றம் சாட்டி வருகிறது.

இந்த பயங்கரவாத தாக்குதலால் இந்தியாபாகிஸ்தான் உறவில் பதற்றம் அதிகரித்துள்ளது. இதன் எதிரொலியாக சிந்து நதிநீர் ஒப்பந்தத்தைநிறுத்திவைப்பதாகவும், இந்தியாவில்உள்ளபாகிஸ்தான் நாட்டவர்கள்உடனடியாக வெளியேற வேண்டும் என்றும் மத்திய அரசு அதிரடியாக அறிவித்தது.

இதே போல் பாகிஸ்தான் அரசு, தனது வான்வெளியில் இந்திய விமானங்கள்பறக்கதடைவிதிக்கப்படுவதாகவும்,சிம்லாஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பதாகவும் அடாவடி அறிவிப்புகளை வெளியிட்டது. மேலும் இருநாட்டு அரசுகளும் தங்கள் ராணுவ படைகளை தயார் நிலையில் வைத்திருக்கின்றன.

இந்த சூழலில், இரண்டு அணு ஆயுத சக்திகளுக்கு இடையே மோதல் ஏற்படுவது கவலையளிப்பதாக அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் தெரிவித்துள்ளார். இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், "பிராந்திய மோதலுக்கு வழிவகுக்காத வகையில் பயங்கரவாத தாக்குதலுக்கு இந்தியா பதிலடி கொடுக்க வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்.

குறிப்பாக இரண்டு அணு ஆயுத சக்திகளுக்கு இடையே மோதல் ஏற்படுவது மிகவும் கவலையளிக்கிறது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் அரசுகளுடன் நாங்கள் நெருங்கிய தொடர்பில் இருக்கிறோம். அதோடு தங்கள் பிரதேசத்தில் செயல்படும் பயங்கரவாதிகள் வேட்டையாடப்படுவதை உறுதி செய்ய இந்தியாவுடன் பாகிஸ்தான் ஒத்துழைக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

## தேனி மாவட்டத்தில் கடமலைமயிலை ஒன்றியத்தில் 18 ஊராட்சிகள் ஏராளமான பொதுமக்கள் கலைஞர் கனவு இல்ல திட்டத்திற்கு விண்ணப்பம்

தேனி, மே.2

தேனி மாவட்டம் கடமலைமயிலை ஒன்றியத்தில் 18 ஊராட்சிகள் உள்ளது. இந்த ஊராட்சிகளை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலைஞர் கனவு இல்ல திட்டத்திற்கு விண்ணப்பம் அளித்திருந்தனர். இதையடுத்து கடந்த சில நாட்களாக ஊராட்சி வாரியாக தகுதியான பயனாளிகளை தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்றது. இதில் 18 ஊராட்சிகளில் 469 பேர் பயனாளிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு கலைஞர் கனவு இல்ல திட்டத்திற்கான பணி ஆணை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது ஆண்டிபட்டி எம்.எல்.ஏ மகாராஜன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பயனாளிகளுக்கு பணி ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் தி.மு.க கடமலைமயிலை ஒன்றிய செயலாளர்கள் சுப்பிரமணி, தங்கப்பாண்டி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் ஏராளமானவர் கலந்து கொண்டனர்.



## ஈரோடு இரட்டை கொலை; காவல்துறை துரித நடவடிக்கை அமைச்சர் முத்துசாமி விளக்கம்

ஈரோடு, மே.3

ஈரோடு மாவட்டம் சிவகிரி அருகே விளாங்காட்டு வலசு கிராமத்தில் தனியாக வசித்து வந்த ராமசாமி பாக்கியம் தம்பதியினர் படுகொலை செய்யப்பட்டு, 15 சவரன் நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவத்தை குறிப்பிட்டு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், மக்களை அச்ச நிலைக்கு தள்ளிய தி.மு.க. அரசுக்கு கடும் கண்டனம் தெரிவிப்பதாக விமர்சித்துள்ளார். இந்நிலையில், எடப்பாடி பழனிசாமியின் விமர்சனம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் முத்துசாமி, "கொலை சம்பவம் குறித்து தகவல் தெரிந்த உடனேயே அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. சில இடங்களில் 8 மணி நேரத்திற்குள் குற்றவாளிகள் பிடிக்கப்பட்டுள்ளனர். ஈரோடு இரட்டை கொலை சம்பவத்தில் காவல்துறை துரிதமாக நடவடிக்கை எடுத்து வருகிறது. பிரேத பரிசோதனை அறிக்கை வந்த பிறகு அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்று தெரிவித்தார்.




## உலகின் அதிக வயதான பெண் உடல்நலக்குறைவு காரணமாக காலமானார்



அமெரிக்கா, மே.3

உலகின் அதிக வயதான பெண் இனாஹ் கனாபாரோ தனது 116 வயதில் காலமானார்.

உலகின் அதிக வயதான பெண் உடல்நலக்குறைவு காரணமாக காலமானார். பிரேசில் நாட்டைச் சேர்ந்த இனாஹ் கனாபாரோ லுகாஸ் என்பவர் கடந்த 1908ம் ஆண்டு ஜூன் மாதம் பிறந்தார். 1934ம் ஆண்டு தனது 26 வயதில் கன்னியாஸ்திரியாக துறவு பூண்டு வாழ்ந்து வந்த இனாஹ் கனாபாரோ தனது 116 வயதில் காலமானார்.

இனாஹ் கனாபாரோ உடல்நலக்குறைவு காரணமாக இறந்ததாக அவரது குடும்பத்தினர் உறுதிப்படுத்தியுள்ளனர். இனாஹ் கனாபாரோ மறைவுக்குப் பிறகு, உலகின் அதிக வயதான பெண் என்ற பட்டம், இங்கிலாந்தின் சர்ரேயைச் சேர்ந்த 115 வயதான எதெல் கேட்டர்ஹாமுக்குச் சென்றுள்ளது.

## கரூர்: பயன்பாட்டிற்கு வந்த சுங்ககேட் பயணிகள் நிழற்குடை




கரூர், மே.3

குளித்தலை, கிருஷ்ணராயபுரம், லாலாபேட்டை, மாயனூர், புலியூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் பொதுமக்கள் கரூர் சுங்ககேட் பஸ் நிறுத்தத்தில் இறங்கி மற்றொரு பஸ் மூலம் கலெக்டர் அலுவலகம், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகம், மாவட்ட நீதிமன்றம், தாந்தோன்றிமலை பெருமாள் கோவிலுக்கு செல்வார்கள். மேலும் சுங்ககேட் மற்றும் அதன்சுற்றியுள்ளபகுதிகளைசேர்ந்த பொதுமக்கள் சுங்ககேட் பஸ் நிறுத்தத்தில் நின்றுதான் பஸ் ஏறி சென்று வருகின்றனர்.

இந்த நிலையில் கரூர் சுங்ககேட்டில் பயணிகளின் வசதிக்காக நிழற்குடை அமைக்கப்பட்டது. இந்த நிழற்குடையில் பயணிகள் அமரும் வகையில் இருக்கைகள் அமைக்கப்பட்டிருந்தன.

ஆனால் நாளடைவில் சுங்ககேட் நிழற்குடையில் இருக்கைகள் உடைந்தும், காணாமலும் போய் விட்டன. இதன் காரணமாக பயணிகள் நிழற்குடையில் இருக்கைகள் இல்லாமல் இருந்தன.

இதனால் பஸ்சுக்காக காத்திருக்கும் பயணிகள் உட்கார முடியாமல் நின்று கொண்டே இருக்கும் சூழல் ஏற்பட்டது.

நீண்ட நேரம் நிற்க முடியாத முதியவர்கள் தரையில் அமர்ந்து செல்லும் நிலை இருந்தது. இதனால் சுங்ககேட் பயணிகள் நிழற்குடையில் இருக்கை வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இது தொடர்பாக கடந்த மாதம் தினத்தந்தி நாளிதழில் படத்துடன் விரிவான செய்தி வெளியிடப்பட்டது. இந்த செய்தியின்எதிரொலியாகசுங்ககேட் பயணிகள் நிழற்குடையில், பயணிகள் அமரும் வகையில் இருக்கைகள் அமைக்கும் பணி கடந்த மாதத்தில் நடைபெற்றது.

தற்போது இருக்கைகள் அமைக்கும் பணி முழுமையாக நிறைவடைந்தது. இதனையடுத்துசுங்ககேட் பயணிகள் நிழற்குடை இருக்கைகளை பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் செய்தி வெளியிட்ட தினத்தந்திக்கும், நடவடிக்கை எடுத்த அதிகாரிகளுக்கும் அப்பகுதி பயணிகள், சமூக ஆர்வலர்கள் நன்றி தெரிவித்தனர்.

## அடுத்த மாதம் தேர்தல்; தென்கொரிய அதிபர் ராஜினாமா



சியோல், மே.3

தென்கொரியாவில் ராணுவ அவசர நிலை அறிவித்த விவகாரம் தொடர்பாக அதிபர் யூன் சுக் இயோல் பதவி நீக்கம் செய்யப்பட்டார். பின்னர் அந்த நாட்டின் பிரதமர்ஹான்டக்சூ(வயது 70)தற்காலிகஅதிபராகநியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் புதிய அதிபரை தேர்வு செய்வதற்கான நாடாளுமன்ற தேர்தல் அடுத்த மாதம் (ஜூன்) 3ந்தேதி நடைபெறுகிறது. இதில் பழமைவாத கட்சியான தென்கொரிய மக்கள் சக்தி கட்சி சார்பில் ஹான் டக்சூ போட்டியிடுகிறார்.

இதனால் தனது அதிபர் பதவியை அவர் ராஜினாமா செய்துள்ளார். இதனையடுத்து துணை பிரதமர் சோய் சாங்மோக் தற்காலிக அதிபராக செயல்படுவார் என அதிபர் மாளிகை தெரிவித்துள்ளது.



சென்னை பெருநகர காவல்துறையில் புலன் விசாரணை காவல் அதிகாரிகள், ஆளிநர்கள், நீதிமன்ற சாட்சியம் அளிக்க எழும்பூரில் தனி வீடியோ கான்பரன்ஸ் அறை கூடுதல் காவல் ஆணையாளர் (தலைமையிடம்) துவக்கி வைத்தார்.

## சென்னை தலைமை செயலகத்தில் பயர் அலாரம் திடீரென ஒலி எழுப்பியதால் பரபரப்பு



சென்னை, மே.3

சென்னை தலைமை செயலகத்தில் உள்ள பேரவை நுழைவுவாயிலில் தீயணைப்பு துறை சார்பில் பயர் அலாரம் பொருத்தப்பட்டுள்ளது. எதிர்பாராத விதமாக தீ விபத்து ஏற்படும் பட்சத்தில், ஒலி எழுப்பி எச்சரிக்கை செய்வதற்காக இந்த கருவி பயன்படுத்தப்படுகிறது. இந்நிலையில், தலைமை செயலகத்தில் பொருத்தப்பட்டுள்ள பயர் அலாரம் இன்று திடீரென எச்சரிக்கை ஒலியை எழுப்பியது. இதையடுத்து அதிகாரிகளும், பாதுகாவலர்களும் உடனடியாக அங்கு விரைந்து வந்தனர். அவர்கள் மேற்கொண்ட சோதனையில் தலைமை செயலகத்தில் தீ விபத்து எதுவும் ஏற்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. பயர் அலாரத்தில் சிறிய பழுது ஏற்பட்டு ஒலி எழுப்பியதாகவும், தற்போது பழுது சரிசெய்யப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவத்தால் தலைமை செயலகத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.



# தருமபுரி மாவட்டம் குழந்தை தொழிலாளியை வேலைக்கு வைத்த பங்கு உரிமையாளர் உணவு கேட்டதற்கு கட்டி வைத்து அடித்த கொடூரம்: நடவடிக்கை எடுக்க கோரிக்கை

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி, தென்கரை கோட்டை காந்திநகர் பகுதியை சேர்ந்த திருமால் (லேட்), தேவி இவர்களது மகன் தருண் (16) வாழ்வாதாரத்திற்காக சென்னை குடி பெயர்ந்த அவரது அம்மா கூலி வேலை செய்து வரும் நிலையில், குடும்ப சூழ்நிலை காரணமாக கள்ளியூர் பகுதியில் ராமகிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமான நெற்கதிர் அடிக்கும் வண்டியில் உதவியாளராக வேலையில் சேர்ந்துள்ளார்,



வேலையை முடித்த பிறகு சாப்பிடுவதற்கு சாப்பாடு கேட்ட போது சாதி பெயரை சொல்லி தகாத வார்த்தையால் பேசியதால் வேலையை விட்டு செல்வதாக ராமகிருஷ்ணன் என்பவரிடம் சொல்லிவிட்டு வந்த பிறகு ஓரிரு நாட்கள் கழித்து நேற்று ராமகிருஷ்ணன்

சொந்தமான பெட்ரோல் பங்கில் பெட்ரோல் அடிக்க சென்றபோது ராமகிருஷ்ணன் அவரது மகன் உள்ளிட்ட ஐந்து பேர் கொண்ட கும்பல் 16 வயது சிறுவன் தருணை சாதி பெயரை சொல்லி திட்டி கட்டி வைத்து மூங்கில் தடி, பெல்ட் கயிறு உள்ளிட்ட பொருட்களைக் கொண்டு அடித்ததாக கூறப்படுகிறது,

இதுகுறித்து தருணுடன் சென்ற சிறுவன் ஒருவன் கட்டிவைத்து அடித்தது குறித்து அவரது உறவினர்களிடம் தகவல் கொடுத்த பிறகு சிறுவனை மீட்ட அவரது உறவினர்கள் அரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறான்,

சிறுவன் மீது தாக்குதல் குறித்து நடவடிக்கை எடுக்க கோரி அ.பள்ளிபட்டி காவல்நிலையத்தில் மனு அளிக்க சென்றபோது சிறுவனின் உறவினர்களை அவமதிக்கும் வகையில் மனுவை வாங்காமல் காவல்துறையினர் நடவடிக்கை எடுக்க மறுப்பதாக குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர்

சிறுவன் மீது தாக்குதல் நடத்திய பெட்ரோல் பங்க் உரிமையாளர் ராமகிருஷ்ணன் உள்ளிட்ட தாக்குதல் நடத்திய கும்பல் மீது உடனடி நடவடிக்கை எடுக்க தமிழக அரசுக்கும் கோரிக்கை விடுத்துள்ளனர்

தற்போது கோடை விடுமுறை என்பதால் பள்ளி மாணவ மாணவியரை குழந்தை தொழிலாளர்களாக அமர்த்திக் கொள்ளும் போக்கு பரவலாக தர்மபுரி மாவட்டத்தில் வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகள், கட்டுமானப் பணிகள், செங்கல் சூளைகள், போன்ற பகுதிகள் பெரிய அளவில் குழந்தை தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டு வருகின்றனர்

எனவே குழந்தை தொழிலாளர் நல துறை சார்பில் மாவட்டம் முழுவதும் ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட நிர்வாகத்திற்கு சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

# மாநிலங்களை மையப்படுத்திய வளர்ச்சியால் பாரத தேசம் வளர்ந்து கொண்டிருக்கிறது கவர்னர் ஆர்.என். ரவி



சென்னை, மே.3

குஜராத், மராட்டியம், இமாசலபிரதேச மாநிலங்கள் உருவான தின விழா கொண்டாட்டம் சென்னை கவர்னர் மாளிகையில் நேற்று நடந்தது. தமிழகத்தில் வாழும் குஜராத், மராட்டியம், இமாசலபிரதேச மக்கள் தங்களது குடும்பத்தினருடன் பாரம்பரிய உடையில் இந்த விழாவுக்கு வந்தனர். மேலும் இந்த விழாவில், தமிழக கவர்னர் ஆர்.என். ரவி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

குஜராத், மராட்டியம், இமாசலபிரதேச மாநிலங்கள் உருவான தினம் அந்தந்த மாநில மக்களுக்கான கொண்டாட்டம் கிடையாது. பாரத தேசத்தில் வாழும் அனைத்து மக்களுக்குமான கொண்டாட்டம்.

இந்தியாவில் ஒரு காலத்தில் 15 மாநிலங்கள் மட்டுமே இருந்தன. இப்போது 28 மாநிலங்கள், 7 யூனியன் பிரதேசங்கள் என பாரத தேசம் பரந்து விரிந்து உள்ளது. மாநிலங்களை மையப்படுத்திய வளர்ச்சியால் பாரத தேசம் வளர்ந்து கொண்டிருக்கிறது.

நம் பாரத தேசத்தை போல அழகான தேசம் உலகில் வேறு எங்கும் கிடையாது. குஜராத்தில் உள்ள துவாரகா குஜராத் மக்களுக்கு மட்டுமானது கிடையாது. தமிழ்நாட்டில் உள்ள ராமேசுவரம் தமிழக மக்களுக்கானது மட்டுமில்லை. இவை அனைத்தும் ஒட்டுமொத்த தேசத்துக்கும் ஆனது.

இந்தியர்கள் உணவு முறை, உடை, கலாசாரம், பண்பாடு போன்றவற்றில் வெவ்வேறாக இருந்தாலும் பாரத தேசம் எனும் போது ஒன்றிணைகிறார்கள். பிரதமர் நரேந்திர மோடி, பாரத தேசத்தின் வளர்ச்சியை மட்டுமே மையமாக வைத்து திட்டங்களையும், வளர்ச்சி பணிகளையும் செயல்படுத்தி வருகிறார்.

அமெரிக்கா போல பல் வேறு மாகாணங்களாக பிரிந்து இல்லாமல் அனைத்து மாநிலங்களும் இணைந்த பாரத தேசமாக இந்தியா திகழ்கிறது. எந்த ஏற்றத்தாழ்வும், பாகுபாடும் இன்றி பாரத தேச மக்களின் அடிப்படை தேவைகளை அறிந்து அவர்களுக்கான திட்டங்களையும், வளர்ச்சி பணிகளையும் பிரதமர் மோடி செயல்படுத்தி வருகிறார். இவ்வாறு அவர் பேசினார்.

# பதவி கணக்கு போட்டுக்கொண்டு தி.மு.க.வுடன் ம.தி.மு.க. கூட்டணி அமைக்கவில்லை வைகோ



சென்னை, மே.3

சென்னையில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது;

"சாதிவாரி கணக்கெடுப்பு 4 ஆண்டுகளுக்கு முன்னாலேயே நடத்தப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், மக்கள் தொகை கணக்கெடுப்போடு சாதிவாரி கணக்கெடுப்பையும் நடத்தப் போகிறோம் என்ற மத்திய அரசின் அறிவிப்பிற்கு பாராட்டுகளும், நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்த பிழைக்கும் இடமின்றி சாதிவாரி கணக்கெடுப்பை முறையாக நடத்த வேண்டும். பதவிக்காக கணக்கு போட்டுக்கொண்டு தி.மு.க.வுடன் ம.தி.மு.க. கூட்டணி அமைக்கவில்லை. எனவே எந்த சூழ்நிலையிலும் தி.மு.க. கூட்டணியில் ம.தி.மு.க தொடர்ந்து ஈடுபடும்." இவ்வாறு வைகோ தெரிவித்தார்.

# பொய்யான வாக்குறுதிகள் கொடுத்து தி.மு.க. அரசு விவசாயிகளை ஏமாற்றி வருகிறது அண்ணாமலை

சென்னை, மே.3

தமிழக முன்னாள் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:



கரும்புக்கு குறைந்தபட்ச ஆதார விலையை டன் ஒன்றுக்கு ரூ.3,550 ஆக உயர்த்தி வழங்கியுள்ள, பாரதப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசுக்கு, தமிழகக் கரும்பு விவசாயிகள் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். கடந்த 201516 ஆண்டுகளில் ரூ.2,300 ஆக இருந்த விலையை, கடந்த பத்து ஆண்டுகளில் ரூ.1,250 அதிகரித்து வழங்குகிறது நமது மத்திய அரசு.

ஆனால், தனது 2021 தேர்தல் அறிக்கையில், கரும்புக்கு குறைந்தபட்ச ஆதார விலையாக ரூ.4,000 வழங்கப்படும் என்று பொய் வாக்குறுதி கொடுத்து ஆட்சிக்கு வந்த தி.மு.க., நான்கு ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், கரும்பு விவசாயிகளுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

கடந்த 2021ம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்த போது, கரும்பு ஒரு டன்னுக்கு ரூ.2,850 வழங்கியது

மத்திய அரசு. மீதமுள்ள ரூ.1,150 விலையை சேர்த்து, விவசாயிகளுக்கு ரூ.4,000 ஆக தி.மு.க. அரசு வழங்கும் என்று ஒவ்வொரு ஆண்டும் தமிழக அமைச்சர்கள் பொய் கூறிக் கொண்டிருந்தார்கள்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக, ரூ.4,000 வழங்குவதாகக் கூறியது தி.மு.க. அரசு. தற்போது மத்திய அரசு கரும்பு ஒரு டன்னுக்கு, ரூ.3,550 வழங்குகிறது. இதனுடன் அந்த ரூ.1,150 சேர்த்து, ஒரு டன்னுக்கு ரூ.4,700 ஆக, கரும்பு விவசாயிகளுக்கு தி.மு.க. அரசு வழங்குவது தான் நியாயம்.

ஒவ்வொரு ஆண்டும் பொய்யான வாக்குறுதிகள் கொடுத்து தமிழக விவசாயிகளை ஏமாற்றி வரும் தி.மு.க. அரசு, இதற்கு மேலும் தமிழக விவசாயிகளை ஏமாற்ற முயற்சிப்பது நடக்காது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# கன்னியாகுமரி: கண்ணாடி பாலத்தை ரசிக்க படையெடுக்கும் சுற்றுலா பயணிகள்

கன்னியாகுமரி, மே..3

கன்னியாகுமரி கடலின் நடுவே ஒரு பாறையில் அய்யன் திருவள்ளுவர் சிலையும் மற்றொரு பாறையில் சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபமும் அமைந்துள்ளன. விவேகானந்தர் பாறையில் இருந்து திருவள்ளுவர் சிலைக்கு செல்ல கடலின் நடுவே கண்ணாடி நடை பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த கண்ணாடி நடை பாலம் சுற்றுலா தலமான கன்னியாகுமரிக்கு மேலும் ஒரு மணிமகுடமாக அமைந்துள்ளது. இந்த கண்ணாடி நடை பாலத்தில் நடந்த சென்றவாறு கீழே உள்ள கடல் அழகை ரசிப்பது தான் இதன் தனிச்சிறப்பாகும். இந்த பாலம் சுற்றுலாப் பயணிகளை வெகுவாக கவர்ந்துள்ளது. இதனால் இந்த பாலத்தை பார்வையிட வருகை தரும் வெளிநாட்டு, வெளிமாநில, வெளிமாவட்ட சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.



இந்த பாலத்தில் நின்றவாறு செல்போன்கள் மூலம் புகைப்படங்கள் எடுத்தும், செல்பி எடுத்தும் சுற்றுலா பயணிகள் மகிழ்கிறார்கள். வழக்கமாக கன்னியாகுமரியில் சீசன் அல்லாத காலங்களில் சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் குறைந்து விடும். ஆனால் இந்த ஆண்டு சீசன் அல்லாத காலமான ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் கூட சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் அதிகமாக இருந்தது.

இந்தநிலையில் கன்னியாகுமரியில் கடல் நடுவே தமிழ்நாடு அரசு அமைந்துள்ள கண்ணாடி பாலத்தின் அழகை ரசிக்க சுற்றுலாப் பயணிகள் மத்தியில் பெருகும் ஆதரவு அதிகரித்துள்ளது. கடந்த மாதம் 21ம் தேதி முதல் இன்று வரை சுமார் 1 லட்சம் பயணிகள் (வருகை தந்துள்ளதாக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக்கழகம் தகவல் தெரிவித்துள்ளது. பள்ளிகளுக்கு கோடை விடுமுறை என்பதால் வரும் நாட்களில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்ககூடும் என்று கூறப்படுகிறது.

# பாரதிதாசன் பிறந்தநாளையொட்டி தமிழ் வெல்லும் என்ற தலைப்பில் போட்டிகள் தமிழக அரசு அறிவிப்பு




சென்னை, மே.3

பாரதிதாசன் பிறந்தநாளையொட்டி 'தமிழ் வெல்லும்' என்ற தலைப்பில் போட்டிகள் நடைபெற உள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"புரட்சிக்கவியும், சமூக சிந்தனையாளருமான பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110ன் கீழ் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், ஏப்ரல் 29ந்தேதி முதல் மே 5ந்தேதி வரை தமிழ் வாரம் கொண்டாடப்படும் என்று அறிவித்துள்ளார். அதனையொட்டி செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் வாயிலாக "தமிழ் வெல்லும்" என்னும் தலைப்பில் பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

"புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்" போன்ற புகழ் பெற்ற கவிதை வரிகளால் பெரும் புகழ் படைத்த பாவலரான பாரதிதாசன், 'புரட்சிக்கவி' என்றும், 'பாவேந்தர்' என்றும் அழைக்கப்படுகிறார். தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம் மற்றும் சைவ சித்தாந்த வேதாந்தங்களை முறையாகக் கற்று, தமிழ் மொழிக்கு அருந்தொண்டாற்றியவர் பாரதிதாசன்.

தமிழாசிரியர், கவிஞர், அரசியல்வாதி, திரைக்கதாசிரியர், எழுத்தாளர், கவிஞர், என்று பல்வேறு துறைகளில் தமிழ் மொழியின் இனிமையை மக்களிடம் எடுத்துச் சென்றவர் என்று சொன்னால் அது மிகையன்று. தனது படைப்புகளுக்காக 'சாகித்திய அகாடமி விருது' பெற்றவர். பாவேந்தர் பாரதிதாசனின் வாழ்க்கை வரலாறு மற்றும் தமிழ்மொழியில் அவருக்கிருந்த பற்று என்றளவும் நிலைத்து நிற்கும். அவரது தலைசிறந்த படைப்புகள்ளை இன்றைய இளந்தலைமுறையினர் அவசியம் கற்றுணர வேண்டிய ஒன்று.

பாரதியாரிடம் நட்பு கொண்ட காரணத்தால் பாரதிதாசன் என்ற புனை பெயரிலேயே அவர் தனது படைப்புகளை வெளியிட்டார். அவருடைய கவிதைகள் சாதி ஒழிப்பு, கல்விச் சமத்துவம், பெண்கள் உரிமை, மொழிப் பாதுகாப்பு, பண்பாட்டு எழுச்சி போன்ற கருத்துகளால் நிரம்பியவை. தனி மனித சுதந்திரத்தையும் சமூக சமத்துவத்தையும் தமது கவிதைகளில் போதித்தவர் பாரதிதாசன்.

தமிழையும், திராவிட அடையாளத்தையும் நெஞ்சில் கொண்டு நடைபோட்டார். தமிழை வளர்த்தல் ஒன்று, சாதியை ஒழித்தல் மற்றொன்று என்று கொள்கைப் பாதை வகுத்து தந்தவர் புரட்சிக் கவி அவர்கள். மொழிமானம், மொழி குறித்த பெருமிதம் ஆகியவற்றின் மொத்த வடிவம்தான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

அவரது படைப்புகளில் இயற்கையின் அழகு மட்டுமல்ல, மக்களின் வாழ்வும் தமிழ் உணர்வும், சமூகத்தின் நடுநிலையும் நன்கு பிரதிபலிக்கின்றன. பொதுவாக, பாரதிதாசனின் இலக்கியங்கள் கற்பனைச் சிற்பங்கள் அல்ல; அவை மண்ணோடும், மக்களோடும் அவர்களின் உணர்வுகளின் வெளிப்பாடுகள். திராவிட செம்மொழி இயக்கத்திலும் தமிழ் உரிமை போராட்டத்திலும் அவரது பங்களிப்பு போற்றப்பட வேண்டியது.

"தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழின்பத் தமிழ் எங்கள் உயிருக்குநேர்" என்று தமிழைப் உயிராகப் போற்றியவர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், புரட்சிக்கவி பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்த நாளை சிறப்பிக்கும் வண்ணம் ஏப்ரல் 29 முதல் மே 5 வரை தமிழ் வாரமாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்துள்ளார். இதனையொட்டி செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் வாயிலாக "தமிழ் வெல்லும்" என்ற தலைப்பில் பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

போட்டிகள் அதன் விதிமுறைகளும் பின்வருமாறு:

போட்டி 1: பேச்சுப் போட்டி தலைப்புகள்:

- தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!
  உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே!
- பாரடா உனது மானிடப் பரப்பை!
- எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் ஒரு கதை சொல்லட்டுமா

வீடியோ அல்லது ஆடியோ வடிவில் அமைதல் வேண்டும். (3 நிமிடம்).

போட்டி 2: கவிதைப் போட்டி

தலைப்புகள்:

- தமிழே! தமிழர் உயிரே!
- வரிப் புலியே தமிழ் காக்க எழுந்திரு!
- இனிமைத் தமிழ் மொழி எமது!
- தமிழும் நானும்

நான்கு தலைப்புகளில் ஏதாவது ஒன்றில் 1 பக்க அளவில் கவிதைகள் அமைதல் வேண்டும்.

கவிதைகளை எழுதி PDF கோப்பாக அனுப்ப வேண்டும்

போட்டி 3: கட்டுரைப் போட்டி

தலைப்புகள்:

- புதியதோர் உலகு செய்வோம்
- துறைதோறும் தொண்டு செய்வாய்!
- அறிவை விரிவு செய்!
- மாபெரும் தமிழ்க் கனவு

நான்கு தலைப்புகளில் ஏதாவது ஒன்றில் 3 பக்க அளவில் கட்டுரைகள் அமைதல் வேண்டும்.

கட்டுரைகளை எழுதி PDF கோப்பாக அனுப்ப வேண்டும்

போட்டி 4: ஓவியப் போட்டி

பாவேந்தரின் கவிதைகள், காவியங்கள், நாடகங்களைக் கருவாகக் கொண்டு ஓவியங்கள் அமைதல் வேண்டும்.

ஓவியங்களை PDF கோப்பாக அனுப்ப வேண்டும்

போட்டி 5: ஒப்பித்தல் போட்டி

தலைப்பு:

- பாவேந்தரின் 'தமிழியக்கம் நூலிலிருந்து 1(கரும்பு தந்த தீஞ்சாறே), 3 (ஔண்டமிழ்த்தாய் சிலம்படியின்) பாடல்களைப் பரிந்துரைக்கலாம்.

குறித்து பதிவிட வேண்டும்.

வீடியோ அல்லது ஆடியோ வடிவில் அமைதல் வேண்டும். (3 நிமிடம்).

போட்டியில் கலந்து கொள்பவர்கள் tndip rmhtamilvellum@gmail.com என்ற மின்னஞ்சல் மற்றும் கீழ்கண்ட விரைவு துலங்கள் குறியீடு (QR code) வாயிலாகவும் படைப்புகளை மே 31 ந் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தஞ்சை பெரியகோவிலில் முகம் சுளிக்கவைக்கும் ரீல்ஸ்: நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்



தஞ்சை, மே.3

தென்தமிழகத்தில் பிரசித்தி பெற்ற நெல்லை டவுனில் நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் கோவில் உள்ளது. இங்கு தினமும் உள்ளூர் பக்தர்கள் தவிர ஏராளமான வெளியூர் பக்தர்களும், சுற்றுலா பயணிகளும் வந்து செல்கிறார்கள். மேலும் புதுமண தம்பதிகள், கல்லூரி மாணவமாணவிகளும் வந்து வழிபடுவதுடன் செல்போன் மூலம் செல்பி எடுக்கிறார்கள்.

உள்பிரகார வீதிகள், ரதவீதிகள், இசைத்தூண், கல்தூண்களில் உள்ள சிற்பங்களின் அருகில் நின்றும் புகைப்படம், வீடியோ எடுத்து செல்கிறார்கள். இதற்கு பெரிதாக கட்டுப்பாடு எதுவும் விதிக்கப்படுவதில்லை. இவ்வாறு கோவில், சுற்றுலா தலங்களில் எடுக்கும் புகைப்படங்களை சிலர் தங்களது நண்பர்களுக்கு பகிர்வதுடன், சமூக வலைத்தளங்களில் பதிவேற்றமும் செய்கிறார்கள்.

இதேபோல் நெல்லையப்பர் கோவிலுக்கு வந்த ஒரு மாணவரும், மாணவியும் சேர்ந்து அம்பாள் சன்னதி அருகே நின்று நடனமாடி வீடியோவாக பதிவு செய்தனர். பின்னர் அதனை பிரபல பாடலுடன் இணைத்து 'ரீல்ஸ்' வீடியோவாக சமூக வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்தனர். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவியதால், பக்தர்கள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பியது.

இதையடுத்து கோவில் நிர்வாக அலுவலர் அய்யர் சிவமணி நேற்று நெல்லை மாநகர சைபர் கிரைம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். புனிதமிக்க இடமான சுவாமி நெல்லையப்பர் கோவில் வளாகத்தில் 'ரீல்ஸ்' வீடியோ எடுத்து வெளியிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி இருந்தார்.

இதுகுறித்து சம்பந்தப்பட்டவர்களை தேடி வருகிறோம் சைபர் கிரைம் போலீசார் தெரிவித்தனர். இதற்கிடையே நெல்லையப்பர் கோவிலில் நடனமாடி 'ரீல்ஸ்' வீடியோ வெளியிட்ட மாணவரும், மாணவியும் நேற்று தங்களது செயலுக்கு மன்னிப்பு கேட்டு மற்றொரு வீடியோ வெளியிட்டனர். அதில், ''நெல்லையப்பர் கோவிலில் நடனமாடி வீடியோ எடுத்ததற்கும், அதை வெளியிட்டதற்கும் மன்னிப்பு கேட்டு கொள்கிறோம். அந்த வீடியோவை சமூக வலைத்தளத்தில் இருந்து நீக்கி விட்டோம். இனி மேல் இது போன்ற இடங்களில் வீடியோ எடுக்க மாட்டோம்'' என்று தெரிவித்தனர்

இந்தநிலையில் அதேபோல, தஞ்சை மாவட்டத்தில் அமைந்துள்ள தஞ்சை பெரிய கோவில் மிகவும் புகழ் பெற்றது.

இந்த கோவிலுக்கு நாள்தோறும் வெளிநாட்டினர், அண்டை மாநிலங்கள், உள்ளூரில் இருந்து பொதுமக்கள் வருகை தருகின்றனர். அந்த வகையில் கோடை விடுமுறை தற்பொழுது அறிவித்துள்ளதால் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை அதிகமாகி உள்ளது.

அந்த வகையில் இளம் பெண்கள் சிலர் தஞ்சை பெரிய கோவிலுக்கு வந்துள்ளனர். அப்போது கோவிலின் நுழைவாயிலில் சினிமா பாடலுக்கு ரீல்ஸ் எடுத்துள்ளனர். அதனை தங்களது இன்ஸ்டாகிராமில் பதிவிட்டனர்.

இந்த வீடியோ சமூகவலைத்தளங்களில் வைரலாக பரவியது. தமிழர்களுடைய பெருமைக்கும், சிற்ப கலைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் தஞ்சை பெரியகோவிலில் முகம் சுளிக்கவைக்கும் வகையில் இரண்டு பெண்கள் நடனமாடியது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது இது குறித்து காவல்துறையினர் விசாரணை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பாக வழக்கு பதிவு செய்த காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டனர்.

அப்போது இந்த வீடியோ தமிழ்புத்தாண்டு அன்று எடுத்தது தெரியவந்தது. மேலும் இந்த சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்த காவல்துறையினர் விசராணை மேற்கொண்டு வருகின்றனர். பொதுவாக கோவில்களில் செல்போன் , மற்றும் கேமிரா உள்ளிட்ட பொருள்கள் எடுத்து செல்ல கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்ட நிலையில் இந்த விவகாரம் பேசுப்பொருளாகி உள்ளது. மேலும் தமிழகத்தில் சட்ட ஒழுங்கு குறித்து கேள்வி எழுப்பி உள்ளது. ஏற்கெனவே கோவில்களில் சிறுவர்கள் சிலர் ரீல்ஸ் எடுத்து பதிவிட்ட நிலையில் இது தற்பொழுது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

# பஹல்காம் தாக்குதல் எதிரொலி; சென்னையில் பாதுகாப்பு அதிகரிப்பு

சென்னை, மே.3

காஷ்மீரின் பஹல்காம் சுற்றுலா தளத்தில் கடந்த 22ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்ட சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.



இந்த தாக்குதல் சம்பவத்தின் எதிரொலியாக, நாடு முழுவதும் உள்ள பெருநகரங்களில் போலீசார் கண்காணிப்பு பணிகளை தீவிரப்படுத்தியுள்ளனர். அந்த வகையில், தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னையில் பாதுகாப்பை அதிகரிக்க போலீசாருக்கு காவல் துறை உயர் அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

பொதுமக்கள் கூடும் இடங்களில் கண்காணிப்பை தீவிரப்படுத்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் சோதனை செய்ய காவல் ஆய்வாளர்களுக்கு காவல் துறை உயர் அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். மேலும் உளவுத்துறையை முடுக்கிவிட்டு அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நடைபெறாமல் நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

# எலான் மஸ்க் வீடியோக்களை பயன்படுத்தி நிதி மோசடி சைபர் கிரைம் போலீசார் எச்சரிக்கை

சென்னை, மே.3

தமிழ்நாடுசைபர்கிரைம் போலீசார் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

சமீபத்தில் சமூக ஊடகங்களில் (உதாரணமாக இன்ஸ்டாகிராம்) எலான் மஸ்க் (டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின்தலைமை செயல்அதிகாரி)கிரிப்டோ நாணய முதலீட்டுகளை ஆதரிக்கிறார் என தவறானத் தகவல்களை பரப்பும் போலியானவிளம்பரவீடியோக்கள் அதிகரித்து வருகின்றன.

இந்த மோசடிகள் பொதுவாக எலான் மஸ்க் அல்லது அவருடைய தந்தை எரோல் மஸ்க் ஆகியோர் அளித்த பேட்டிகளை AI அல்லது எடிட்டிங் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தவறாக திருத்தி உருவாக்கப்பட்டவை. இதன் மூலம் மக்கள் நம்பிக்கையை பெற முயற்சிக்கின்றனர்.

சைபர் கிரைம் பிரிவு இதுவரை 26 போலியான இன்ஸ்டாகிராம் முகவரிகள் மற்றும் 14 போலியான இணையதளங்களை கண்டறிந்து, அவற்றை முடக்குவதற்காக நடவடிக்கைகள் எடுத்துள்ளது. முக்கியமாக, எலான் மஸ்க் எந்தவொரு கிரிப்டோ முதலீட்டு செயலியை அல்லது இணையதளத்தையும் ஆதரிக்கவில்லை என்பதை மக்களுக்கு தெரிவிக்கிறோம். பொது மக்களுக்கு எச்சரிக்கை:

போலி மோசடிகளை அடையாளம் காணும் வழிகள்:

• அதிக லாபம் உறுதி அளிக்கும் வாய்ப்புகள் – நம்பகத்தன்மையற்றவை.

• பிரசித்திபெற்ற நபர்களின் புகைப்படங்கள் அல்லது வீடியோக்கள் – தன்னிச்சையாக உருவாக்கப்பட்டவை



யாக இருக்கலாம்.

• மூலமற்ற இணையதள முகவரிகள், செயலிகள் – பதிவிறக்கம் செய்ய வேண்டாம். மக்களுக்கு அறிவுரை: • தகவல்களை அரசு அல்லது நிதி ஒழுங்குமுறை அமைப்புகளின் அதிகாரபூர்வ இணையதளங்களில் சரிபார்க்கவும்.

• அறியாத இணையதளங்களுக்கு தனிப்பட்ட மற்றும் வங்கிக் கணக்கு விபரங்களை பகிர வேண்டாம். • பதிவுசெய்யப்பட்ட மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகளால் அங்கீகரிக்கப்பட்ட கிரிப்டோ பரிமாற்றங்களை மட்டும் பயன்படுத்தவும்.

எங்கே புகார் கொடுக்கலாம்?

• சைபர் மோசடிக்குள்ளானவர்கள் 1930 என்ற ஹெல்ப்லைன் எண்ணை அழைக்கலாம்.

• அல்லது www.cybercrime.gov.in இணையதளத்தில் புகார் அளிக்கலாம்.

புகாரளித்தல்:

இதே போன்ற மோசடி நடவடிக்கைகளில் நீங்கள் பாதிக்கப்பட்டிருந்தால் அல்லது சந்தேகத்திற்கிடமான செயல்பாடுகளைக் கண்டால், உடனடியாக நடவடிக்கை எடுக்கவும். சைபர் கிரைம் கட்டணமில்லா உதவி எண் 1930 யை அழைக்கவும் அல்லது www.cybercrime.gov.in ல் புகார் பதிவு செய்யவும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசு ஊழியர்களின் சொத்து விவரங்களை வெளியிட முடியாது தமிழ்நாடு தகவல் ஆணையம்

சென்னை, மே.3

அரசு ஊழியர்களின் சொத்துக்கள் மற்றும் கடன்கள் குறித்த விவரங்களைவெளியிடமுடியாது என்று தமிழ்நாடு தகவல் ஆணையம் தெரிவித்துள்ளது.

பொதுநலன் இல்லாமல் தனிப்பட்ட விவரங்களை வெளியிட முடியாது என்றும் தகவல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. கிருஷ்ணகிரியில் நீர்த்தேக்க




திட்ட உதவி பொறியாளராக பணியாற்றிய காளிப்பிரியனின் சொத்து,

கடன், வருமான வரி விவரங்களை, தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் சீனிவாசன் என்பவர் கோரி இருந்தார்.

மனுவை விசாரித்த மாநில தகவல் ஆணையர் ஆர்.பிரியக்குமார், விண்ணப்பத்தை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

# பெண்களை குறிவைத்து பாலியல் சீண்டல்: ஜிபே மூலம் சிக்கிய இளைஞர் கைது

சென்னை, மே.3

சென்னை முகப்பேர் பகுதியில் தனியாக நடந்து சென்ற 19 வயது இளம் பெண்ணிடம், இருசக்கர வாகனத்தில் வந்த நபர் திடீரென பாலியல் சீண்டலில் ஈடுபட்டார். இந்த சம்பவம் தொடர்பாக 150க்கும் மேற்பட்ட சிசிடிவி காட்சிகளை வைத்து ஆய்வு செய்த போலீசார், அம்பத்தூர் அருகே டாஸ்மாக்கில் அந்த இளைஞர் ஜிபே மூலம் பணம் செலுத்தியதை கண்டுபிடித்தனர். அக்கடையின் குறிப்பிட்ட அந்த நாள், நேரத்தின் பரிவர்த்தனையை வைத்து செல்போன் எண்ணை கண்டறிந்து பிடித்துள்ளனர்.

ஜிபே எண் மூலம் நீலாங்கரையை சேர்ந்த சரத்பாபு



(31) என்ற தனியார் வங்கி கலெக்ஷன் ஏஜெண்டாக பணிபுரிந்து வந்தது போலீசார் விசாரணையில் தெரிய வந்தது. கைது செய்யப்பட்ட சரத்பாபு, அம்பத்தூர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு, புழல் சிறையில் அடைக்கப்பட்டார். கைதான சரத்பாபு, எழும்பூரில் நடந்து சென்ற பெண்ணிடம் அத்துமீறிய புகாரில் ஏற்கனவே கைதாகி சிறை சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது

# தொண்டனாகவே இருக்க விரும்புகிறேன் செங்கோட்டையன் பேச்சு

ஈரோடு, மே.3

ஈரோடு மாவட்டம் ஆசனூரில் நடைபெற்ற மே தின பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் பேசியதாவது:

நான் தொண்டனாகவே இருந்து பணியாற்ற விரும்புகிறேன். அதிமுக வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு பணியாற்றுகிறேன். இந்த இயக்கம் மண்ணிலே வளர வேண்டும். இயக்கத்தில் இருப்பவர்கள் ஆட்சியில் இருக்க வேண்டும். அப்போது தான் நமது கண்ணீர் துடைக்கப்படும். திமுக ஆட்சியில் 4 ஆண்டுகளில் 48 ஆயிரம் பேருக்கு மட்டுமே வேலை வழங்கப்பட்டுள்ளது. நான் அமைச்சராக பணியாற்றிய துறைகளில் நான் மட்டுமே ஒரு லட்சம் பேருக்கு வேலை வழங்கியுள்ளேன். வருகிற சட்டமன்ற தேர்தலில் அதிமுக கூட்டணி மாபெரும் வெற்றி பெறும். அதிமுக ஆட்சி



அமைந்த உடன் தொழிலாளர்கள் நலன் காக்கப்படும். விவசாயிகள் நலன் காக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

அ.தி.மு.கவில் எடப்பாடி பழனிசாமிக்கும் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனுக்கும் இடையே பூசல் நிலவுவதாக பேசப்பட்டு வந்த நிலையில், செங்கோட்டையன் பேச்சுகள் அரசியலில் கவனம் பெற்று வருகின்றன. அந்த வகையில், ஈரோடு மாவட்டத்தில், அ.தி.மு.க. சார்பில் நடைபெற்ற மே தின நிகழ்ச்சியில் செங்கோட்டையனின் பேச்சு அ.தி.மு.கவிலும் அரசியல் களத்திலும் கவனம் பெற்றுள்ளது.

# நீலகிரி: இபாஸ் சர்வரில் சிக்கல் சுற்றுலா பயணிகள் அவதி

நீலகிரி, மே.3

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் நிலவும் இதமான காலநிலையை அனுபவிக்கவும், இயற்கை காட்சிகளை கண்டு ரசிக்கவும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மட்டுமின்றி, வெளிமாநிலங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்து வருகின்றனர்.

இதற்கிடையில், ஊட்டியில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த இபாஸ் நடைமுறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. அங்கு வார இறுதி நாட்களில் 8 ஆயிரம் வாகனங்களையும், வார நாட்களில் 6 ஆயிரம் வாகனங்களையும் அனுமதிக்க வேண்டும் என ஐகோர்ட்டு உத்தரவிட்டிருந்தது.

தற்போது கோடை விடுமுறை விடப்பட்டுள்ள சூழலில், நீலகிரிக்கு அதிக அளவில் சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர்.



இந்த நிலையில், இபாஸ் சர்வரில் இன்று திடீரென சிக்கல் ஏற்பட்டதால், ஊட்டிக்கு வந்த சுற்றுலா பயணிகள் பலர் இபாஸ் எடுக்க முடியாமல் அவதியடைந்தனர்.

இதனால் ஊட்டி கூடலூர் நெடுஞ்சாலையில் சுற்றுலா பயணிகளின் வாகனங்கள் சாலையோரம் அணிவகுத்து நிற்கும் சூழல் ஏற்பட்டது.

தொடர்ந்து சர்வரில் ஏற்பட்ட சிக்கல் சரிசெய்யப்பட்டு, இபாஸ் எடுத்த சுற்றுலா பயணிகள் மேற்கொண்டு செல்வதற்கு அதிகாரிகள் அனுமதி வழங்கினர்.

# மதுரை: விமானத்தில் இருந்து உற்சாகத்துடன் குதித்து இறங்கிய விஜய்...வீடியோ வைரல்

மதுரை, மே.3

தமிழக வெற்றிக் கழக தலைவரும், நடிகருமான விஜய், ஜனநாயகன் திரைப்படத்தின் படப்பிடிப்பிற்காக இன்று மதுரை சென்றுள்ளார். 14 வருடங்களுக்கு பிறகு விஜய் இன்று மதுரைக்கு சென்றுள்ளார். அங்கு அவரை வரவேற்பதற்காக ஏராளமான ரசிகர்களும், த.வெ.க. தொண்டர்களும் குவிந்தனர். மதுரை விமான நிலையத்தில் விஜய்யை கண்டதும் த.வெ.க. தொண்டர்கள் உற்சாகமாக கோஷங்களை அவருக்கு வரவேற்பு அளித்தனர். விஜய்யை காண அதிக அளவில் கூட்டம் கூடியதால் மதுரை விமான நிலையத்தை சுற்றியுள்ள பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. தொடர்ந்து



பிரசார வாகனத்தில் ஏறி நின்று தொண்டர்களை பார்த்து கையசைத்தபடி விமான நிலையத்தில் இருந்துவிஜய்புறப்பட்டுச் சென்றார்.

இந்த நிலையில், மதுரை விமான நிலையத்தில் தனி விமானம் மூலம் வந்தடைந்த விஜய், விமானத்தில் இருந்து இறங்கும்போது, உற்சாகமாக குதித்து இறங்கினார். இது தொடர்பான வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

# கரும்பு கொள்முதல் விலை டன்னுக்கு ரூ.5 ஆயிரம் வழங்க அரசுகள் முன்வர வேண்டும் ராமதாஸ்

சென்னை, மே.3

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

இந்தியாவில் வரும் அக்டோபர் மாதம் தொடங்கவுள்ள அரவைப் பருவத்தில் சர்க்கரை ஆலைகள் கொள்முதல் செய்யும் 10.25 சதவீதம் சர்க்கரைத் திறன் கொண்ட கரும்புக்கான கொள்முதல் விலையாக டன்னுக்கு ரூ.3,550 வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது. தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் 9.5 சதவீதம் மற்றும் அதற்கும் குறைவான சர்க்கரைத் திறன் கொண்ட கரும்புகளுக்கு டன்னுக்கு ரூ.3,290 கொள்முதல் விலையாக வழங்கப்படும் என்றும் மத்திய அரசு அறிவித்துள்ளது. இது எந்த வகையிலும் போதுமானதல்ல.

2024, 25ம் ஆண்டில் 9.50 சதவீதம் சர்க்கரைத் திறன்கொண்ட கரும்புக்கு டன்னுக்குரூ.3,151 கொள்முதல் விலையாக வழங்கப்பட்டது. இப்போது ரூ.139, அதாவது 4.41 சதவீதம் மட்டுமே கொள்முதல் விலை உயர்த்தப்பட்டுள்ளது. கரும்புக்கான சாகுபடி செலவுகள் பெருமளவில் உயர்ந்துள்ள நிலையில், 4.41 சதவீதம் மட்டும் விலையை உயர்த்துவது நியாயமற்றது. இது உற்பத்திச் செலவை ஈடு செய்வதற்குகூடபோதாது.

தமிழ்நாட்டில் ஒரு டன் கரும்புக்கு ரூ.5,500 வழங்கப்பட வேண்டும் என்பது தான் உழவர் அமைப்புகளின் கோரிக்கை ஆகும். ஒரு டன் கரும்பு உற்பத்தி செய்ய ரூ.3,500 வரை செலவாவதாக உழவர்கள் கூறுகின்றனர். அதனுடன் 50 சதவீதம் லாபமாக ரூ.1,750 மற்றும் போக்குவரத்துச் செலவு சேர்த்து டன்னுக்கு ரூ.5,500 வழங்க வேண்டும் என்பது தான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடும் ஆகும். ஆனால், உற்பத்தி செலவை விட குறைவான தொகையை கொள்முதல் விலையாக மத்திய அரசு அறிவித்திருக்கிறது.

கரும்புக்கான கொள்முதல் விலையை மத்திய அரசு குறைவாக நிர்ணயித்தால், அதனால் ஏற்படும் பாதிப்புகளை சமாளிக்கும் வகையில் உழவர்களுக்கு மாநில அரசுகள் ஊக்கத்தொகை வழங்குவது வாடிக்கை. அதன்படி கடந்த ஆண்டு மத்திய அரசு நிர்ணயித்த விலையுடன், தமிழக அரசு ரூ.349 ஊக்கத்தொகை சேர்த்து கரும்புக்கு டன்னுக்கு ரூ.3,500 கிடைக்க வகை செய்தது. நடப்பாண்டில் டன்னுக்கு ரூ.3,700 கிடைக்கும் வகையில் ரூ.410 ஊக்கத்தொகை வழங்க தமிழக அரசு முன்வரலாம் என்று கூறப்படுகிறது. இதுவும் கூட போதுமானதல்ல.



பஞ்சாப் மாநிலத்தில் கடந்த ஆண்டில் ஒரு டன் கரும்புக்கு ரூ.4,100 கொள்முதல் விலை வழங்கப்பட்டது. நடப்பாண்டில் அது ரூ.4,500 ஆக உயர்த்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதனுடன் ஒப்பிடும் போது தமிழக அரசு வழங்கவிருக்கும் கொள்முதல் யானைப்பசிக்கு சோளப்பொரியாகவே பார்க்கப்படும்.

2016ம் ஆண்டு வரை ஒரு டன் கரும்புக்கு ரூ.750 வீதம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வந்தது. 2017ம் ஆண்டில் அது நிறுத்தப்பட்டு விட்டது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால், ஊக்கத்தொகையை மீண்டும் வழங்குவோம் என்று தி.மு.க. அறிவித்தது.

அவ்வாறு வழங்கப்பட்டிருந்தால் அது இப்போது டன்னுக்கு ரூ.1,100 ஆக அதிகரித்திருக்கும். அத்தகைய சூழலில் தமிழ்நாட்டில் ஒரு டன் கரும்புக்கு ரூ.4,390 ஆக உயரக்கூடும். அது ஓரளவு கட்டுபடியாகக் கூடிய விலையாக இருந்திருக்கும். ஆனால், தி.மு.க. சட்டப்பேரவைத் தேர்தலில் அளித்த அதன் வாக்குறுதியை நிறைவேற்ற மறுப்பதால் உழவர்களின் துயரம் தீரவில்லை.

201112ம் ஆண்டில் தமிழ்நாட்டில் கரும்பு சாகுபடி செய்யப்படும் பரப்பு 8 லட்சம் ஏக்கருக்கும் கூடுதலாக இருந்தது. ஆனால், நடப்பாண்டில் அது 2.25 லட்சம் ஏக்கராக குறைந்துவிட்டது. அதற்கு காரணம் கரும்புக்கு நியாயமான விலை கிடைக்காததுதான்.

இதேநிலை நீடித்தால் இன்னும் சில ஆண்டுகளில் தமிழ்நாடு கரும்பு விளையாத மாநிலமாக மாறிவிடும். அது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். அப்படி ஒரு நிலை ஏற்பட்டு விடாமல் மத்திய, மாநில அரசுகள் தடுத்து நிறுத்த வேண்டும்.

கரும்பு கொள்முதல் விலை தொடர்பாக மத்திய அரசுடன் தமிழக அரசு உடனடியாக பேச்சு நடத்தி ஒரு டன் கரும்புக்கான கொள்முதல் விலையாக ரூ.4,000 நிர்ணயிக்க வகை செய்ய வேண்டும். அத்துடன் தமிழக அரசின் சார்பில் டன்னுக்கு ரூ.1,000 ஊக்கத்தொகை வழங்கி உழவர்களுக்கு ஒரு டன் கரும்புக்கு ரூ.5,000 கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தூத்துக்குடி: சைபர் குற்ற வழக்குகளில் மோசடி செய்த ரூ.3.71 லட்சம் மீட்பு

தூத்துக்குடி மே.3

தூத்துக்குடி மாவட்டத்தில் ஆன்லைனில் முதலீடு செய்தால் அதிக லாபம் பெறலாம் என வந்த விளம்பரம் மற்றும் இணையதளத்தில் இருசக்கர வாகனம் விற்பனை செய்வதாக வந்த விளம்பரம் ஆகியவற்றை நம்பி தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த பெண் உட்பட 3 பேர் பணத்தை அனுப்பி ஏமாற்றப்பட்டு மோசடி அடைந்துள்ளனர். பின்னர் பாதிக்கப்பட்ட 3 பேரும் இதுகுறித்து NCRPல் (National Cyber crime Reporting Portal) புகார் பதிவு செய்துள்ளனர்.



மேற்சொன்ன புகாரின் அடிப்படையில் மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் உத்தரவின்படி, தூத்துக்குடி சைபர் குற்றப்பிரிவு ஏ.டி. எஸ்.பி. சகாய ஜோஸ் மேற்பார்வையில், சைபர் குற்றப்பிரிவு இன்ஸ்பெக்டர் சாந்தி தலைமையிலான சைபர் குற்றப்பிரிவு போலீசார் தொழில்நுட்பரீதியாக விசாரணை மேற்கொண்டு, மோசடிக்கு பயன்படுத்தப்பட்ட வங்கி கணக்குகளை கண்டறிந்து அவற்றை முடக்கம் செய்து நடவடிக்கை மேற்கொண்டு ஆன்லைன் முதலீடு மோசடி வழக்குகளில் ரூ.38,993, ரூ.2,98,510 மற்றும் இருசக்கர வாகன விற்பனை மோசடி வழக்கில் ரூ.34,000 என மொத்தம் ரூ.3,71,503 பணம் திரும்ப பெறப்பட்டு மீட்கப்பட்டது. இதனையடுத்து மேற்சொன்ன மீட்கப்பட்ட ரூ.3 லட்சத்து 71 ஆயிரத்து 503 பணத்தை நேற்று (30.04.2025) மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைத்தார்.

# சீமானுக்கு கொலை மிரட்டல் விடுத்தவர் கைது



தேனி, மே.3

தேனி மாவட்டத்தைச் சேர்ந்த சந்தோஷ் என்பவர் கடந்த 28ந் தேதி அவரது 'இன்ஸ்டாகிராம்' சமூக வலைதளபக்கத்தில், நாம் தமிழர்கட்சியின்தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலை விரைவில் துண்டாக்கப்படும். தெலுங்கு பேசும் மக்களை தவறாக பொதுத் தளத்தில் பதிவிட்டால் அதற்கு முழு பொறுப்பு சீமான்தான். அதன் விளைவு மரணம் என்று, சீமானுக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

எனவே, மிரட்டல் விடுத்த சந்தோஷ் மீதும், அவரது பதிவை 'டேக்' செய்து பதிவிட்டுள்ள 4 நபர்கள் மீதும், அவர்கள் சார்ந்துள்ள இயக்கம் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் நாம் தமிழர் கட்சியின் இளைஞர் பாசறை மாநில ஒருங்கிணைப்பாளர் இடும்பாவனம் கார்த்திக் புகார் அளித்தார்.

இந்த நிலையில் நாம் தமிழர்கட்சியின்தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானுக்கு கொலை மிரட்டல் விடுத்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அதன்படி, ஆண்டிபட்டி ஜக்கம்பட்டியைச் சேர்ந்த சந்தோஷ் என்பவரை, தேனி சைபர் கிரைம் போலீசார் கைது செய்துள்ளனர்.

# கோவை வெள்ளியங்கிரி கோவிலுக்கு கும்கி யானை வரவழைப்பு

கோவை, மே.3

கோவையில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி பூண்டி அடிவாரத்தில் வெள்ளியங்கிரி ஆண்டவர் கோவில் உள்ளது. இந்த கோவில் அடிவாரத்தில் இருந்து சுமார் 6 ஆயிரம் அடி உயரத்தில் 7வது மலையில் சுயம்புலிங்க சுவாமி உள்ளது. இந்த மலையில் உள்ள சுயம்புலிங்க சுவாமியை தரிசிக்க ஆண்டுதோறும் பிப்ரவரி முதல் மே மாதம் வரை பக்தர்கள் அனுமதிக்கப்படுவது வழக்கம்.

இந்த ஆண்டும் கடந்த பிப்ரவரி மாதம் 1ந் தேதி முதல் பக்தர்கள் மலையேறி சாமி தரிசனம் செய்து வருகின்றனர். தற்போது அதிகளவிலான பக்தர்கள் நாள்தோறும் மலையேற்றம் செய்து வருகின்றனர். இதற்கிடையில் வெள்ளியங்கிரி மலையடிவாரத்தில் உள்ள பூண்டி வெள்ளியங்கிரி ஆண்டவர் கோவிலில் உள்ள அன்னதான கூடத்திற்கு காட்டு யானைகள் உணவு தேடி அடிக்கடி வந்து செல்கின்றன.

கடந்த திங்கட்கிழமை, வெள்ளியங்கிரி ஆண்டவர் கோவில் வளாகத்தில் அமைக்கப்பட்டு இருந்த கடை பகுதிக்குள் ஒற்றை ஆண் காட்டு யானை புகுந்தது. படிக்கட்டு வழியாக



இறங்கி வந்த யானை, இரும்புதடுப்பினைதள்ளி விட்டு உள்ளே நுழைந்து அங்கிருந்த பொருட்களை சேதப்படுத்தியது. இந்த சம்பவம் பக்தர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியது. மேலும் காட்டு யானை நடமாட்டம் அதிகரித்து இருப்பதால், பக்தர்கள் கவனத்துடன் வெள்ளியங்கிரி மலையேற வருமாறு வனத்துறையினர் அறிவுறுத்தி உள்ளனர்.

இந்த நிலையில், கோவை வெள்ளியங்கிரி கோவிலில் காட்டு யானை அச்சுறுத்தி வரும் நிலையில், பக்தர்களின் பாதுகாப்புக்காக டாப்சிலிப் முகாமில் இருந்து நரசிம்மன் என்ற கும்கி யானை வரவழைக்கப்பட்டுள்ளது. காட்டு யானை வந்தால் அதை வனப்பகுதிக்குள் விரட்ட நரசிம்மன் தயார் நிலையில் இருப்பதாக வனத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நாளை மேலும் ஒரு கும்கி யானை அழைத்து வரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருமுடிவாக்கம் சிட்கோவில் ரூ.37.25 கோடியில் விடுதி கட்டப்படும்: அமைச்சர் தா.மோ.அன்பரசன்

சென்னை: , மே.3

திருமுடிவாக்கம் சிட்கோவில் ரூ.37.25 கோடியில் 648 தொழிலாளர்கள் தங்கும் வகையில் விடுதி கட்டப்படும் என்று அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல் தெரிவித்துள்ளார். பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட நிலையில் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. திமுக அரசு பொறுப்பேற்று இதுவரை 13 புதிய தொழிற்பேட்டைகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.



அனைத்து தொழிற்பேட்டைகளிலும் மின்சாரம், சாலை, குடிநீர் உள்ளிட்ட வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

3.5.2025

## உயிருக்கு ஆபத்தான நிலையில் நடிகர் சூப்பர்குட் சுப்ரமணி

சென்னை:, மே.3

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நடிகர் சூப்பர் குட் சுப்பிரமணி, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நடிகரும் இயக்குனருமான இவர், கடுமையான புற்றுநோயால் பாதிக்கப்பட்டு தற்போது உயிருக்கு ஆபத்தான நிலையில் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுவது குறித்த புகைப்படங்கள் தற்போது வெளியாகியுள்ளது.

## மதுரை சித்திரை திருவிழா: பக்தர்கள் சுத்தமான தண்ணீரை பயன்படுத்த அறிவுறுத்தல்



மதுரை, மே.3

மதுரையை ஆண்ட மகாராணிக்கு சித்திரை மாதம் நடைபெறும் திருவிழா உலகப்புகழ் பெற்றது. இந்த விழாவை பிரம்மோற்சவ விழாவாக கொண்டாடுகிறார்கள். இந்தாண்டு சித்திரை திருவிழா கடந்த மாதம் 29ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்வான அழகர் வைகை ஆற்றில் எழுந்தருளும் நிகழ்ச்சி வரும் 12ந்தேதி நடைபெற உள்ளது. இந்த நிகழ்ச்சியின்போது உற்சவர் சிலை மீது பக்தர்கள் தண்ணீரை பீய்ச்சி அடிக்கும் வைபவம் நடைபெறும்.

இந்நிலையில், தண்ணீரை பீய்ச்சி அடிக்கும் பக்தர்கள், பொதுமக்களுக்கு அழகர் கோவில் நிர்வாகம் பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. அதன்படி, நிகழ்ச்சியின்போது பக்தர்கள் அதிக விசைத்திறன் கொண்ட குழாய்கள் மூலம் தண்ணீரை பீய்ச்சி அடிக்கக் கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாசனை திரவியம், வேதிப்பொருட்கள் அடங்கிய தண்ணீரை உற்சவர் சிலை மீது பீய்ச்சி அடிக்க வேண்டாம் எனவும், பக்தர்கள் சுத்தமான தண்ணீரை பயன்படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் விரதம் இருந்து ஐதீக முறைப்படி தோல் பையில் சிறிய குழாய் பொறுத்தி தண்ணீரை பீச்சி அடிக்க பக்தர்கள் மற்றும் பொதுமக்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## கேபிள் டிவி கழகத்திற்கு விதிக்கப்பட்ட ரூ.570 கோடி அபராதம் இடைக்கால தடை விதித்த ஐகோர்ட்டு



சென்னை, மே.3

கடந்த 2017 2022 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், கேபிள் டிவி ஆபரேட்டர்கள் செலுத்தாத ஜிஎஸ்டி வரி, 285 கோடியே 4 லட்சத்து 79 ஆயிரத்து 342 ரூபாயை அபராதத்துடன் சேர்த்து 570 கோடி ரூபாய் செலுத்தும் படி, ஜிஎஸ்டி ஆணையரகம், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கழகத்திற்கு நோட்டீஸ் அனுப்பி இருந்தது.

இந்த நோட்டீசை எதிர்த்து தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கழகம் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்திருந்தது.

இதுதொடர்பான மனுவில், மல்டி சிஸ்டம் ஆப்ரேட்டர் என்ற முறையில் அரசு கேபிள் டிவி கழகம், தொலைக்காட்சி சேனல்களின் சிக்னல்களை உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்களுக்கு வழங்கும். உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்கள் அந்த சிக்னல்களை நுகர்வோர்களுக்கு வழங்குகின்றனர். நுகர்வோர்களிடமிருந்து உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்கள் வசூலிக்கும் தொகையில், அரசு கேபிள் டிவி கழகம், சம வருமானத்தை பெறுகிறது. அதற்கான ஜிஎஸ்டி வரி, எந்த பாக்கியும் இல்லாமல் செலுத்தப்பட்டு வருகிறது. உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்கள், அவர்களுக்கான ஜிஎஸ்டி வரியை செலுத்த வேண்டும். அதற்கு அரசு கேபிள் டிவி கழகம் பொறுப்பாகாது என்பதால், 285 கோடி ரூபாய் வரியை அபராதத்துடன் சேர்த்து 570 கோடி ரூபாய் செலுத்தும் படி ஜிஎஸ்டி ஆணையரகம் பிறப்பித்த உத்தரவுக்கு தடை விதிக்க வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்த போது, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கழகம் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் வில்சன், கேபிள் டிவி ஆபரேட்டர்களின் வருமானத்தை, அரசு கேபிள் டிவி கழகத்தின் வருமானமாக கருத முடியாது.. மேலும் ஜிஎஸ்டி ஆணையரகம் பிறப்பித்த நோட்டீசுக்கு உரிய பதிலளித்தும் அதை பரிசீலிக்காமல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று வாதிட்டார். இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதி, 285 கோடி ரூபாய் ஜிஎஸ்டி வரியை அபராதத்துடன் சேர்த்து 570 கோடி ரூபாய் செலுத்தும் படி தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கழகத்திற்கு ஜிஎஸ்டி ஆணையரகம் பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டார்

## ராமநாதபுரத்தில் உள்ள இயற்கை எரிவாயு மின் நிலையத்தினை ஆய்வு செய்தார் கூடுதல் தலைமைச் செயலாளர் ராதாகிருஷ்ணன்..!!

ராமநாதபுரம், மே.3

இராமநாதபுரம் மாவட்டம், வழுதூர் 196 மெகாவாட் மின் உற்பத்தி திறனுடைய இயற்கை எரிவாயு மின் நிலையத்தினை கூடுதல் தலைமைச் செயலாளர் ஜெ. ராதாகிருஷ்ணன் நேரில் ஆய்வு செய்தார். இராமநாதபுரம் மாவட்டம், வழுதூரில் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு சொந்தமான 196 மெகாவாட் மின் உற்பத்தி திறனுடைய இயற்கை எரிவாயு சுழலி மின் நிலையத்தினை (Gas Turbine Power Plant) தமிழ்நாடு மின்வாரியத் தலைவர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு செய்தார்கள்.



இந்த மின் நிலையத்திற்கு தேவையான இயற்கை எரிவாயு ONGC கிடங்கிலிருந்து நேரடியாக பெறப்பட்டு மின் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த மின் உற்பத்தி நிலையத்தின் மின் கட்டமைப்பு நிலைத்தன்மை மற்றும் உச்ச மின் தேவை மேலாண்மையில் மிக முக்கிய பங்காற்றுகிறது.

இந்தமின்நிலையத்தின் செயல்பாட்டுத் திறன், எரிவாயு கிடைக்கும் நிலை மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய பராமரிப்புத் திட்டங்களை பற்றி விரிவாக ஆலோசனை நடத்தி உரிய உத்தரவுகளை பிறப்பித்தார். மேலும், அங்குள்ள மின் நிலையப் பொறியாளர்கள் மற்றும் பணியாளர்களிடம் மிக சிறந்த மின் உற்பத்திக்கும், முன்னெச்சரிகை நடவடிக்கைக்கும் மற்றும் கோடைகால உச்ச மின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்யும் வகையில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். உடன் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜித் சிங்காஹ்லோன், இ.ஆ.ப., மேற்பார்வை பொறியாளர் வெண்ணிலா, செயற்பொறியாளர் முத்துவிநாயகம் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## கிரானைட் ஊழல் வழக்கில் ஆஜராக மதுரையின் முன்னாள் கலெக்டர் சகாயம் மறுப்பு


சென்னை, மே.3

உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி, கிரானைட் ஊழல் வழக்கில் ஆஜராக மதுரையின் முன்னாள் கலெக்டர் சகாயம் மறுப்பு தெரிவித்துள்ளார். தமிழக அரசு தனது பாதுகாப்புப் பிரிவை திரும்பப் பெற்றதால் மதுரைக்கு சென்று ஆதாரங்களை வழங்க முடியவில்லை என்று மதுரை முன்னாள் ஆட்சியர் சகாயம் ஐ.ஏ.எஸ் சிறப்பு அரசு வழக்கறிஞருக்கு கடிதம் எழுதியுள்ளார்.



தனது பாதுகாப்புப் பிரிவை திரும்ப பெற்றது பாரபட்சமானது, குறைபாடுடையது மற்றும் நியாயமற்றது எனவும் கூறியுள்ளார்.

## பெரிய கோயில் தேரோட்டத்தை முன்னிட்டு தஞ்சை மாவட்டத்துக்கு மே 7ம் தேதி உள்ளூர் விடுமுறை அறிவிப்பு



தஞ்சாவூர், மே.3

பெரிய கோயில் தேரோட்டத்தை முன்னிட்டு தஞ்சை மாவட்டத்துக்கு மே 7ம் தேதி உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்விடுமுறையை ஈடு செய்ய மே 24 ஆம் தேதி சனிக்கிழமை தஞ்சாவூர் மாவட்டத்தில் அனைத்து அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள் செயல்படும் என தஞ்சை மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ளார்.

## நீலகிரி கோத்தகிரியில் 13வது காய்கறி கண்காட்சி இன்று தொடக்கம்



நீலகிரி, மே.3

நீலகிரி கோத்தகிரியில் 13வது காய்கறி கண்காட்சி நாளை நேரு பூங்காவில் தொடங்குகிறது. நேரு பூங்காவில் 13வது காய்கறி கண்காட்சி இன்று மற்றும் நாளை நடைபெற உள்ளது.

## நம்மிடம் 10,000தான்... ஆனால் அமெரிக்கா, சீனாவில்... அமீர் கான் பரபரப்பு பேச்சு



பிரபல பாலிவுட் நடிகர் அமீர் கான். தனது கெரியரில் பல வெற்றிப்படங்களை கொடுத்து முன்னணி நட்சத்திரங்களில் ஒருவராக அமீர் கான் வலம் வருகிறார்.

இந்நிலையில், மும்பையில் நடைபெற்றுவரும் உலக ஆடியோ விஷுவல் மற்றும் பொழுதுபோக்கு உச்சிமாநாட்டின் (WAVES) இரண்டாம் நாளில் அமீர்கான் பங்கேற்று பேசினார். அவர் கூறுகையில்,

"நம் நாட்டின் பரப்பளவையும் வசிக்கும் மக்களின் எண்ணிக்கையையும் கருத்தில் கொண்டு பார்க்கையில் இந்தியாவில் மிகக் குறைவான எண்ணிக்கையிலேயே திரையரங்குகள் உள்ளன. சுமார் 10,000 திரையரங்குகள் இருக்கும் என்று நினைக்கிறேன்.

அதில் பாதி தெற்கிலும், மீதி பிற பகுதிகளிலும் உள்ளன. ஆனால் நம் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு கொண்ட அமெரிக்காவில் 40,000 திரையரங்குகள் உள்ளன. சீனாவில் 90,000 உள்ளன.

திரைப்படங்களை விரும்பும் நாடாக கருதப்படும் நம் நாட்டில், 2 சதவீத மக்கள் மட்டுமே திரையரங்குகளுக்கு வந்து படம் பார்க்கிறார்கள். மீதமுள்ள 98 சதவீதத்தினர் எங்கே படம் பார்க்கிறார்கள்?.

இந்தியாவின் கொங்கண் போன்ற பல பகுதிகளில் திரையரங்குகளே இல்லை. அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் திரைப்படங்களைப் பற்றிக் கேள்விப்படுவார்கள். ஆனால் அவற்றைப் பார்க்க வழி இல்லை. அது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. எனவே நாம் திரையரங்குகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். முதலில் செய்ய வேண்டியது அதைத்தான் ' என்றார்.

## 'ஹவுஸ்புல் 5' படத்தின் முதல் பாடல் வெளியீடு

அக்சய் குமார் , ஜியா கான், அர்ஜுன் ராம்பால், ஜாக்குலின் பெர்னாண்டஸ், லாரா தத்தா மற்றும் சங்கி பாண்டே ஆகியோர் நடிப்பில் கடந்த 2010ல் 'ஹவுஸ்புல்' தொடரின் முதல்பாகம் வெளியானது.

இந்த தொடரில் இதுவரை 4 பாகங்கள் வெளியாகி உள்ளன. ஒவ்வொன்றும் முந்தைய பாகத்தின் கதையுடன் தொடர்பில்லாத ஒரு புதிய கதையாகவே இருக்கும். தற்போது 'ஹவுஸ்புல்' தொடரின் 5ம் பாகம் உருவாகி உள்ளது. 5வது பாகத்தை எட்டிய முதல் இந்திபடம் என்ற பெருமை 'ஹவுஸ்புல்' படத்தையே சேரும்.

இதில், அக்சய் குமார், ரித்தேஷ் தேஷ்முக், அபிஷேக் பச்சன், ஜாக்குலின் பெர்னாண்டஸ், சோனம் பாஜ்வா, நர்கிஸ் பக்ரி, பர்தீன் கான்,சித்ராங்கதா சிங் , சவுந்தர்யா சர்மா, ஜாக்கி ஷெராப், சஞ்சய் தத், நானா படேகர் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

வருகிற ஜூன் மாதம் 6ம் தேதி இப்படம் வெளியாக உள்ளது. சமீபத்தில் இப்படத்தின் டீசர் வெளியாகி வைரலானநிலையில், தற்போது முதல் பாடலுக்கான டீசர் வெளியாகி உள்ளது. அதன்படி 'லால் பாரி' என்ற பாடல் நாளை வெளியாகிறது.

## லண்டனில் 'ரெட்ரோ' படத்தைப் பார்த்த பூஜா ஹெக்டே யாருடன் தெரியுமா? : வைரலாகும் வீடியோ



தமிழில் 'முகமூடி' படத்தின் மூலம் அறிமுகமான பூஜா ஹெக்டே, விஜய்யுடன் 'பீஸ்ட்' படத்தில் நடித்து கவனம் பெற்றார். தற்போது இவர் சூர்யாவுடன் 'ரெட்ரோ' படத்தில் நடித்துள்ளார். தமிழ், தெலுங்கு உள்ளிட்ட மொழிகளில் நேற்று திரையரங்குகளில் வெளியான இப்படம் கலவையான விமர்சனங்களை பெற்று வருகிறது.

இப்படத்தில் ருக்மணி என்ற கதாபாத்திரத்தில் பூஜா ஹெக்டே நடித்துள்ளார். இந்நிலையில், நடிகை பூஜா ஹெக்டே லண்டனில் 'ரெட்ரோ' படத்தை பார்த்துள்ளார். அவருடன் நடிகர் வருண் தவான் மற்றும் மிருணாள் தாகூரும் 'ரெட்ரோ' படத்தை பார்த்துள்ளனர். இது தொடர்பான வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

பூஜா ஹெக்டே, வருண் தவானுடன் 'ஹாய் ஜவானி தோ இஷ்க் ஹோனா ஹாய்' என்ற படத்தில் நடித்து வருகிறார். மேலும், விஜய்யுடன் 'ஜனநாயகன்' படத்திலும் நடித்து வருகிறார். இப்படம் அடுத்த ஆண்டு பொங்கலுக்கு வெளியாக உள்ளது.

## டி20 தொடர்: யு.ஏ.இக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் வங்காளதேசம்





வங்காளதேச கிரிக்கெட் அணி சமீபத்தில் ஜிம்பாப்வேவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஆடியது. இந்த தொடர் 11 என சமனில் முடிந்தது. இதையடுத்து வங்காளதேச அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் ஆட உள்ளது. இந்த தொடர் வரும் 25ம் தேதி தொடங்குகிறது.

இந்த தொடரின் ஆட்டங்கள் பாசில்லாபாத் மற்றும் லாகூரில் நடக்கிறது. இந்நிலையில், வங்காளதேச கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்வதற்கு முன்னர் யு.ஏ.இக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாட உள்ளதாக வங்காளதேச கிரிக்கெட் வாரியம் இன்று அறிவித்துள்ளது.

அதன்படி இவ்விரு அணிகளுக்கும் இடையேயான முதல் டி20 போட்டி மே 17ம் தேதியும், இரண்டாவது போட்டி மே 19ம் தேதியும் ஷார்ஜா கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மூன்று ஆண்டுகளுக்கு பிறகு வங்காளதேச அணி ஐக்கிய அரபு அமீரக அணிக்கு எதிராக இருதரப்பு தொடரில் விளையாடவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ராஜஸ்தானுக்கு எதிரான வெற்றி... பவுல்ட் கூறியது என்ன..?



ஐ.பி.எல். தொடரில் ஜெய்ப்பூரில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் மோதின. இந்த போட்டியில் முதலில் பேட்டிங் செய்த மும்பை அணி 20 ஓவரில் 2 விக்கெட்டை மட்டும் இழந்து 217 ரன்கள் குவித்தது. மும்பை தரப்பில் அதிகபட்சமாக ரிக்கெல்டன் 61 ரன் எடுத்தார். தொடர்ந்து 218 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த ராஜஸ்தான் அணி, மும்பை வீரர்களின் அபார பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது. இதன் காரணமாக ராஜஸ்தான் அணி 16.1 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 117 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. இதன் காரணமாக 100 ரன் வித்தியாசத்தில் மும்பை அபார வெற்றி பெற்றது.

மும்பை தரப்பில் அதிகபட்சமாக பவுல்ட், கரண் சர்மா ஆகியோர் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்ற பின்னர் பவுல்ட் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது, ஒரு அணியாக நாங்கள் இதைவிட வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?. பேட்ஸ்மேன்கள் தற்போது மீண்டும் பார்மிற்கு வந்து பெரிய அளவில் ரன்களை குவிக்கிறார்கள். 210 ரன்கள் என்பது இந்த மைதானத்தில் வெற்றிக்கு போதுமான ரன்கள் என்று நினைத்தோம். அதேவேளையில் எங்களது பந்துவீச்சாளர்கள் மிகச் சிறப்பான பந்துவீச்சை வெளிப்படுத்தி அவர்களை மிகப்பெரிய வித்தியாசத்தில் வீழ்த்தியுள்ளனர். குறிப்பாக ராஜஸ்தான் அணியில் துவக்க வீரர்களான ஜெய்ஸ்வால் மற்றும் சூர்யவன்ஷி ஆகியோர் ஹிட்டர்கள் என்பது எங்களுக்கு தெரியும். அவர்கள் எங்களுக்கு எதிராக அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்துவார்கள் என்பதையும் நாங்கள் உணர்ந்தோம்.

ஆனாலும் பும்ரா எங்கள் அணிக்குள் வந்ததிலிருந்து பெரிய அளவில் மாற்றங்கள் நடைபெற்றுள்ளன. முதல் சில போட்டிகளைஅவர்தவறவிட்டிருந்தாலும்அவர்வந்ததற்குபின்னர்எங்களுடையஅணியின்செயல்பாடுஒட்டுமொத்தமாக மாறியுள்ளது. இனிவரும் போட்டிகளிலும் இந்த வெற்றி அப்படியே தொடரும். இவ்வாறு அவர் கூறினார்.

## ஸ்டார்க், கம்மின்ஸ் இல்லை.. அவர் பந்துவீச்சின் பிராட்மேன் ஆஸி.முன்னாள் கேப்டன் பாராட்டு

ஐ.பி.எல். தொடரில் நேற்றிரவு நடந்த 50வது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் மோதின. இதில் மும்பை 100 ரன் வித்தியாசத்தில் மெகா வெற்றியை பெற்றது. முன்னதாக பார்டர் கவாஸ்கர் கோப்பை டெஸ்ட் தொடரின்போது ஏற்பட்ட காயம் காரணமாக நடப்பு ஐ.பி.எல். சீசனின் ஆரம்ப கட்டத்தில் காயம் காரணமாக சில போட்டிகளை மும்பை இந்தியன்ஸ் அணியின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளரான ஜஸ்பிரித் பும்ரா தவற விட்டார். அதன் காரணமாக தொடர் தோல்விகளை சந்தித்த மும்பை புள்ளிப்பட்டியலில் 9வது இடத்தில் தடுமாறியது. ஆனால் முக்கியமான தருணத்தில் கம்பேக் கொடுத்த பும்ரா இதுவரை 7 போட்டிகளில் 11 விக்கெட்டுகளை கைப்பற்றி மும்பை தொடர்ந்து 6 வெற்றிகளைப் பெற முக்கிய பங்காற்றியுள்ளார். இந்நிலையில் ஜஸ்பிரித் பும்ரா பந்துவீச்சின் டான் பிராட்மேன் என ஆஸ்திரேலிய முன்னாள் கேப்டன் ஆடம் கில்கிறிஸ்ட் பாராட்டியுள்ளார். இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "ஜஸ்பிரித் பும்ரா ஆல் டைம் சிறந்த வேகப்பந்து வீச்சாளராக இருக்கலாம். பும்ரா பல்வேறு சூழ்நிலைகளில் செயல்படுவது பற்றி நீங்கள் அலசி ஆராயுங்கள். அதேபோன்ற வகைப்பாட்டில் பேட்டிங்கில் சர் டான் பிராட்மேன் செயல்பாடுகள் மற்றும் புள்ளிவிவரங்களையும் ஆராயுங்கள். பிராட்மேன் பேட்டிங்கில் எப்படியோ பந்துவீச்சில் ஜஸ்பிரித் பும்ராவும் அனைத்து விதமான வேரியசன், சூழ்நிலைகள், பிட்ச்களில் அசத்தக்கூடிய வகைப்பாட்டை சேர்ந்தவர் என்று நினைக்கிறேன். சொல்லப்போனால் அவர் தற்சமயத்தில் தன்னைச் சுற்றி இருக்கும் மற்ற வீரர்களை காட்டிலும் முன்னிலையில் இருக்கிறார். அது நாம் ஒரு உண்மையான மகத்துவமான வீரரை பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதைச் சொல்கிறது. இந்தியாவில் இருந்துவந்த ஒரு வேகப்பந்துவீச்சாளர் கடந்த ஆஸ்திரேலிய தொடரில் அசத்தினார். பும்ரா பந்துவீச்சை போல ஆஸ்திரேலியர்கள் ஒருபோதும் இந்திய பந்து வீச்சாளர்களுக்கு எதிராக பயப்பட்டதோ அல்லது மிரண்டதோ இல்லை" என்று கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.